# பொதுமை

மலர்: 2
இதழ்: 7
25-09-85
அன்பளிப்பு
2/-

★ நகல் திட்ட யோசனைகளுக்கு கூட்டணி ஒப்புதலளிக்கவில்லை. — அமிர்

★ பேச்சுவார்த்தை மூலம் கிடைக்கும் தீர்வை தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகமும் (PLOT) ஏற்றுக்கொள்ளக் கூடும். — நாடுதிரும்பியபின் அமைச்சர் தொண்டமான்

★ இனவாதம் தொடருமானல் தமிழர்களுக்கே பெரும் அழிவு ஏற்படும். — திரு. உமாமகேசுவரன்

★ பேச்சு, நீதி, சுதந்திரங்களையும் மக்கள் இழக்க நேரிடும். சிங்கள மக்களின் நலன்கள் விட்டுக்கொடுக்கப்படமாட்டாது. ஜே. ஆர். அறிவிப்பு

## இடைக்காலத் தீர்வு சாத்தியமாகுமா?

ஈழம் தேசிய விடுதலை முன்னணியின் தலைவர்கள் புதுடில்லி சென்றிருப்பதும், இந்திய தலைமை அமைச்சர் ராஜிவ் காந்தியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருப்பதனையும் மட்டும் கவனத்தில் எடுக்கும் சிலர் இடைக்காலத் தீர்வு ஒன்றுக்கு இந்தியா தனது நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்கும் என்று எண்ணுகின்றனர். அத்துடன அண்மையில் தமிழகம் சென்று பல முக்கியஸ்தர்களையும் சந்தித்த பின் நாடு திரும்பியபின் பேச்சுவார்த்தை மூலம் கிடைக்கும் தீர்வை த. வி. கூயும், புளட்டும் ஏற்றுக் கொள்ளக்கூடும் என கூறியிருப்பதை அவதானித்து இடைக்காலத் தீர்வாக ஏதோ ஒன்று கிடைக்கக்கூடும் என்றும் அதனை மிதவாதப் போக்குள்ளோர் ஏற்றுக் கொள்வர் என்றும் கருதுகின்றனர். எனவே இன்றைய யதார்த்த சூழலைப் பரிசீலிக்க வேண்டியதவசியமாகிறது.

### அரசாங்கத்தின் நோக்கமும், போக்கும்

சிங்கள இன மக்களின் நலன்கள் எதுவும் விட்டுக்கொடுக்கப்பட மாட்டாது என உறுதியளித்துள்ள ஜே. ஆர். மேலும் பேசுகையில் யுத்தம் ஒன்று ஏற்படக்கூடும் என முன் எச்சரிக்கை விடுத்ததோடு, அத்தருணத்தில் மக்கள் பேச்சுச் சுதந்திரத்தை மட்டுமன்றி நீதிச் சுதந்திரத்தையும் விட்டுக் கொடுக்க வேண்டி வரும் எனத் தெரிவித்துள்ளார். இது மட்டுமன்றி நாளாந்தம் கொள்வனவு செய்யப்படும் நவீனரக ஆயுதங்கள், புதிய புதிய வானூர்திகள், (கெலிக்கப்டர்கள், யுத்தவிமானங்கள்) தொடருகின்ற இராணுவத்தின் வெறியாட்டங்கள் என்ற அனைத்தையும் சேர்த்துப் பார்க்கும் எவரும் அரசாங்கம் எத்தகைய தீர்வை நோக்கிச் செல்கிறது என்பதை உய்த்துணரமுடியும் தனது இராணுவத் தயாரிப்புகளைப் பூரணப்படுத்துவதற்கான கால அவகாசத்தை பெறுவதற்காகவே பேச்சுவார்த்தையை இழுத்தடித்து வருகின்றது என்பது கண்கூடு. மேலும் இரு மாகாணங்களை தமிழர்களுக்கு தாரை வார்க்கத் தயாரா? என்றும் "யுத்தம் ஒன்று ஏற்படின் வெற்றி எமக்கே என்று மார்பு தட்டுவோரையும் எண்ணிப் பார்த்தால் இந்த அரசாங்கம் தமிழ்பேசும் மக்களுக்கு துன்பத்தையும் துயரத்தையும் தவிர வேறெதையும் த்ராது என்பதனைத் துலலியமாக உணரமுடியும்.

அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளை உண்மையான அக்கறையுடன் தீர்த்து வைக்க முயலாத சமயத்தில் மாவட்ட, மாகாணசபைகள் அனைத்தும் அதிகாரமற்ற வெறும கணதுடைப்பே என்பதில் சந்தேகமிருக்க முடியாது. ஆனல பேச்சுவார்த்தை தவிர வேறெதையும் சாதிக்கும் தெம்பையிழந்து போயிருக்கும சக்திகள் ஏதோ ஒன்று கிடைக்கக்கூடும் என்ற பிரமையில் ஆழ்ந்து போயிருக்கக் கூடுமோ என்றே எண்ண வேண்டியுள்ளது. இனவாதம் தொடருமெனின் தமிழ் மக்களுக்கே பெரும் அழிவு ஏற்படும் எனக் கூறும் இவர்கள் முற்போக்கு முனாம்பூச முற்படுகின்றனர்.

இனவாதம் என்பது தமிழ் பேசும் மக்களால் தோற்றுவிக்கப்பட்டதல்ல என்பதையும், ஈழ விடுதலைப் போராட்டம் என்பது வெறும் இன, மொழிச் சிக்கல்களை மட்டுமே உள்ளடக்கியதல்ல என்பதையும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியது இத்தருணத்தில் அத்தியாவசியமானதாகும்.

எழுபதுகளுக்கு முன்பு தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் எனப் பலவாகப் பிளவுபட்டுக்கிடந்த தமிழர் அரசியல் கட்சிகள் ஒரு நெருக்கடியான நிலையில் புதிய அரசியலமைப்பு எழுதப்பட்ட 1972ல் சங்கமித்து தமிழர் கூட்டணியை உருவாக்கின. புதிய அரசியலமைப்பு ஆறு அம்சங்களில் திருத்தத்தை மட்டும் கோரிய தமிழர் கூட்டணி ஈழக் கோரிக்கையை ஏற்க 1976ல் நிர்ப்பந்திக்கப்பட்டது. அதன்பின் தமிழர் விடுதலைக் கூட்டணியாகப் பெயர்மாற்றம் பெற்றது. எனினும் தமிழர் விடுதலைக் கூட்டணி தன் சக்திக்கு உட்பட்ட பல வேலைகளைச் செய்யவில்லைஎன்பதும், வெறுமனே கண்மூடித்தனமான இன உணர்ச்சியொன்றை மட்டுமே ஊட்டிவந்தது என்பதும் தெளிவு. 77ல் தேர்தலில் வெற்றிபெற்றதும் "தமிழீழ தேசிய மன்றம்" அமைக்கப்படும் என்ற உறுதிமொழியை கலவரங்களை காரணம்காட்டி காற்றில் பறக்கவிட்ட கூட்டணி 80ல் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு மனப்பூர்வ ஆதரவை வழங்கிய பின்னர் தமிழ் பேசும் மக்களிடையே செல்வாக்கிழந்து செல்லாக்காசாகிவிட்டது என்பதனை 82ல் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் ஊர்ஜிதம் செய்யும்.

இதேவேளை இந்தியா ஏதோ எம்மை நிர்ப்பந்திக்கும் என்ற பிரமையில் அதீத தீவிரவாதத்தோடு, பேசப்படும் இந்திய எதிர்ப்பு மனோபாவத்தையும் நாம் இனங்காண வேண்டியவர்களாயுள்ளோம். எது எவ்வாறயினும் "குதிரையைக் குளத்தடி வரையும் தான் கொண்டுபோகமுடியும்" தண்ணீர் குடிப்பதும் விடுவதும் அதுதானக செய்யவேண்டியதே என்னும் கருத்திற்கொப்ப சுமத்தப்படும் நிர்ப்பந்தங்கள் அனைத்தும், ஒரு எல்லைவரையிலேயே இருக்க முடியும் என்பதை தெளிய வேண்டும்.

உண்மையான ஐக்கியத்தோடு போராட்டசக்திகள் செயற்படும் வரையிலும், இலங்கை அரசாங்கம் தன் பிடிவாதப் போக்கிலிருந்து மாற்றிக்கொள்ளா தவரையிலும் இடைக்காலத் தீர்வுகள் என்பது சாத்தியமானதொன்ருக கருத இடமில்லை. எனவே எமது மக்கள் உறுதியான மனோபாவத்துடன் போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் மட்டுமே எதிர்கால சந்ததியின் சுபீட்ச வாழ்வுக்கு வழியமைக்க முடியும்.

## ஈழம் தேசிய விடுதலை முன்னணி (ENLF) இந்தியப் பிரதமரைச் சந்தித்தது.

இந்தியப் பிரதமர் திரு. ராஜிவ் காந்தியுடன் நாங்கள் நடத்திய பேச்சுகள் மிகவும் மனமதிறந்த நிலையிலேயே இடம் பெற்றன. சுமார் 90 நிமிடங்கள் நாங்கள் அவருடன் பேசினேம். யுத்த நிறுத்த உடன்படிக்கையை இலங்கை ஆயுதப் படைகள் மீறியிருப்பது. யுத்த நிறுத்த மீறல்களினுல் அப்பாவித் தமிழ் மக்கள் எண்ணுக்கணக்கின்றி கொல்லப்படுவது. குறித்து முன்னணி தெரிவித்த கருத்துக்களை பரிவுடன் செவிமடுத்த இந்தியப் பிரதமரிடம், இந்தப் படுகொலைகளையும் சொத்துக்கள் நாசத்தையும் குறிப்பாக திருமலைப் பகுதியில் நடைபெறும் தாக்குதல்களை முடிவுக்கு கொண்டுவர இந்தியா தனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்றும் முன்னணி கேட்டுக்கொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த திருவாளர்கள் பிரபாகரன், திலகர், சுப்பிரமணியம் ஆகியோரும், ஈழப்புரட்சி அமைப்பைச்சேர்ந்த தோழர்கள் பாலகுமார், இரத்தினசபாபதி ஆகியோரும், தமிழீழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த திருவாளர்கள். சிறீசபாரத்தினம், சார்ள்ஸ் ஆகியோரும், ஈழ மக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியைச் சேர்ந்த திருவாளர்கள் பத்மநாபா, வரதராஜப் பெருமாள் ஆகியோரும் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால், சக்தியாய் உருவெடுக்கும்**

# செய்திகள்

## ஆயுதப்படைகளின்....

✳ 31-8-85 பொத்துவிலைச் சேர்ந்த அயற்காடுகளில் தொடர்ச்சியான சூட்டுச் சத்தத்துடன் கடும் தேடுதல் நடைபெற்றது. அம்பாறை மாவட்டத்தில் கோமாரி என்ற இடத்தில் 65 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

✳ 1-9-85 வவுனியா - மன்னார் வீதியில் ஹெலிகொப்டரிலிருந்து இறங்கிய ஆயுதப்படையினர் அங்கிருந்த வான் ஒன்றையும், மோட்டார் சயிக்கிள் ஒன்றையும் எடுத்துச் சென்றதுடன், அப்பகுதியில் இன்னொரு வானுக்கும், உழவு யந்திரத்துக்கும் தீ வைத்துச் சென்றுள்ளனர்.

✳ 2-9-85 பருத்தித்துறை இராணுவ முகாமிற்குச் சென்ற லொறியொன்று இளைஞர்களால் கடத்தப்பட்டது. அவ் லொறி பழுதடைந்து நிற்க இரண்டு ஹெலிகொப்டர்கள் அப்பகுதியை முற்றுகையிட்டன. வானத்திலிருந்து சுடப்பட்டதில் அறுவர் பலியாகினர்.

✳ 4-9-85 திருமலைப்பகுதியில் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இச்சம்பவத்தால் 15 தமிழர்கள் கொல்லப்பட்டதாக ராய்டர் செய்தி வெளியிட்டுள்ளது. பாலையூற்று, அன்புவழிபுரம், உப்புவெளிபுரம் ஆகிய இடங்களில் ஏற்பட்ட தீ வைப்புகளினால் மக்கள் அகதிகளாக்கப்பட்டு ஸ்ரீ சண்முகா மகா வித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்தனர். இடம் பெயர்ந்த மக்கள் வள்ளங்களில் மூதூர் செல்கையில் கடற்படையினரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காயினர். ஒரு வயோதிபர் பலியானார். காயமுற்ற இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். 10-ம் குறிஞ்சிப் பகுதியில் வள்ளங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

✳ 5-9-85 மதவாச்சிக்கும் வவுனியாவுக்குமிடையே 35பிரயாணிகளுடன் சென்ற பஸ் ஒன்று கடத்தப்பட்டு அனைவரும் உயிருடன் எரிக்கப்பட்டனர். இஸப்பத்தவெவ என்ற இடத்தில் காட்டுப்பகுதியூடாகச் செல்லும் கிராமத்தில் வைத்தே அனைவரும் எரிக்கப்பட்டதாகவும், இதே இடத்தில் மேலும் பல தமிழர் வாகனங்கள், சாரதிகள், ஊழியர்களுடன் தீ மூட்டப்பட்டதாகவும் நம்பகரமான வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

✳ 6-9-85 ஏறாவூர் பொலிஸ் பகுதியிலுள்ள மாவடி வேம்பு கூமாச் சோலை பகுதிகளைச் சேர்ந்த அடர்ந்த காடுகளில் இரு தினங்கள் பெருந்தொகையான பொலிஸ் அதிரடிப் படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். 35க்கு மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். நான்கு ஹெலிகொப்டர்கள் அந்நேரம் மேலே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. கிழக்கு மாகாணத்தில் முதற் தடவையாக இவ்விதம் பாரிய தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டதாக கிழக்குப் பிராந்தியத்தைச் சேர்ந்த பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

✳ 7-9.85 மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிரான், செல்வ நகர், ஆயித்திய மலை, குடும்பி மலை ஆகிய பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் ஹெலிகப்டர்மூலமும், பாரிய வாகனங்கள் மூலமும் தொடர்ச்சியாக தேடுதல் வேட்டை நடத்தினர். பதற்றநிலை பரவியதால் பல கிராமங்கள் இடம் பெயரத் தொடங்கின.

✳ 8-9-85 வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கு அருகாமையிலுள்ள பல வீடுகளை தகர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக புகார் செய்யப்பட்டுள்ளது. அதேவேளை ஊரிக்காடு பகுதியில் கைதான மூன்று இளைஞர்கள் பற்றிய தகவல்கள் எதுவும் இடைக்கவில்லை.

✳ 9-9-85 திருமலையில் இடம் பெற்ற கலவரங்களில் தமிழர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். ஊர்காவல் படையினர் பெருமளவு குடிசைகள், வீடுகள், கடைகள், கோவில் ஆகியவற்றை தீயிட்டுக் கொழுத்தியதாகவும் தெரியவருகிறது மீனவர் சங்கக் கட்டிடங்கள் இரண்டும் இவ்வாறு எரிக்கப்பட்டுள்ளன. திருமலையிலுள்ள 42 அகதிகள் முகாம்களில் சுமார் 23,000 பேர் அகதிகளாக உள்ளனர். மட்டக்களப்பு திருகோணமலை வீதியிலுள்ள கராஜ் ஒன்றில் நின்ற பொலீஸார் அழ்வழியே சைக்களில் வந்த இரண்டு இளைஞர்களை சந்தேகித்து துரத்திப்பிடித்தனர். இருவரும் உடனே சயனைட் உட்கொண்டதில் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமானார். மற்றவர் பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்படுகையில் இறந்தார்.

✳ வவுனியாவிலுள்ள கிராம சேவகர்கள் பிரிவுகளான முகத்தான்குளம் பெரிய குடிகாரன் குளம், முதலியார் குளம், தேரியான் குளம் ஆகிய பிரிவிலுள்ள 22 தமிழ்க் கிராமங்களில் ஆயுதப்படையினரின் அச்சுறுத்தலால் பதற்றம் அதிகரித்துள்ளது. 35 ஆயிரம் மக்கள் டிராக்டர்களிலும், கால்நடையாகவும் நாட்டுப்பாதை வழியாக வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். செட்டிகுளம், புளியங்குளம் பகுதியில் 14 பேர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியுள்ளார்கள்.

✳ வடக்கிலிருந்து கொழும்புக்குச் சென்ற 10 வாகனங்கள் மதவாச்சிப்பகுதியில் காணமற்போய்விட்டன. 8 லொறிகள், 1 மினிபஸ், 1 வான் ஆகியவற்றைக் காணவில்லை யெனக் கூறப்படுகிறது.

✳ நிலாவெளியில் பிற்பகல் இரு பீரங்கி வண்டிகள் சகிதம் சென்ற ஆயுதப்படையினர் தாக்குதல் நடத்தியதில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. பீரங்கிக் குண்டுகளின் தாக்குதலால் முஸ்லிம் நபர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், முஸ்லிம் ஆசிரியை உட்பட மேலும் மூன்று முஸ்லீம்கள் காயமுற்றதாகவும் தெரிய வருகிறது.

✳ 12-9-85 மன்னாரிலுள்ள பரிகாரி கண்டல் என்னுமிடத்தில் அரிசிஆலை ஒன்றுக்கு சென்ற இரு இளைஞர்கள் ஆலைக்குள் அப்போது நின்ற ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். மட்டக்களப்பில் செங்கலடி, வந்தாறுமூலை, சித்தாண்டி, கிரான் ஆகிய பகுதிகளில் 40 இளைஞர்கள் இரகசியப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு பொலிஸ்நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளனர்.

# ஆசிரியரவைக்கு வந்த மடல்

அன்புடையீர்:

விடுதலைப்பாதையில் முன்னேக்கிச் சென்றுகொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் விடுதலைக்காக போராடுகின்ற இயக்கங்கள் இழைக்கின்ற தவறுகளை எப்படி விமர்சிப்பது எனத் தடுமாறிய எனக்கு பொதுமையில் வெளிவந்த ''ஆசிரியருக்கு வந்த மடல்'' பகுதி ஒரு தெம்பையளித்ததனல் இதனை எழுதலானேன் தயவு செய்து பிரசுரிக்க ஆவன செய்யும்படி பணிவாகக் கேட்கிறேன்.

''அத்தியாவசிய சேவைகளை சீர்குலைப்பது ஓர் தற்கொலையே'' எனத் தலைப்பிட்டு, கூட்டுச்சேர்ந்துள்ள ஈழப்புரட்சி இயக்கங்களின் சார்பாக வெளியிடப்பட்ட துண்டு பிரசுரத்தைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்த மக்களில் நானும் ஒருவன். சேவை நோக்கங்களை கொண்ட தாபனங்களை சீர்குலைப்பதை வன்மையாகக் கண்டித்த மேற்படி பிரசுரம் உதாரணத்திற்கு சிலவற்றையும் கோடிட்டு காட்டியிருந்தது.

அதனல் சில கூட்டுறவு அமைப்புகள் இத்துண்டுப்பிரசுரத்தை வரவேற்று பத்திரிகையில் அறிக்கைகள் வெளியிட்டு இருந்ததையும் தாங்கள் படித்திருப்பீர்கள். இவ்வாறு வரவேற்பைப் பெற்ற அப்பிரசுரத்தின் இறுதியில் சேவை நோக்குள்ள தாபனங்களை சீர்குலைக்கும் சக்திகளை மக்களை இனங்காணும் படி கேட்டதுடன், அவ்வாறன இயக்கங்களை பகிரங்கப்படுத்துவதாகவும், நிவாரணத்திற்கென வலியுறுத்துவதாகவும் உறுதியளித்திருந்தீர்கள் இதனலேயே இக்கடிதம் வரைய வேண்டியது அவசியமாயிற்று.

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கென, 9000 இலீற்றர் டீசலுடன் வந்த பவுசர் 21-8-1985 மாலை 4 மணியளவில் கடத்தப்பட்டது. பொதுமக்களின் சொத்துக்கள் கடத்தப்படுவது. எதிர்காலத்தில் நல்ல நோக்குடன் இயங்கும் தாபனங்கள் அனைத்திலும் மக்களுக்கு வெறுப்பினை ஊட்டும் என்பதாலும், எதிரிக்கு இது சாதகமாக வலுவூட்டும் என்பதனலும் இது தொடர்பான போலிகளை மக்கள் முன் இனங்காட்டி மீண்டும் நடைபெறாது தடுக்க ஆவன செய்யுமாறு தயவுடன் கூறுகின்றேம்.

இதேபோல் காங்கேசன் சீமேந்து ஆலையும் தொடர்ந்தும் பல தடவைகள் கொள்ளையிடப்பட்டதை தெரிந்திருப்பீர்கள். மீண்டும், மீண்டும் இடம்பெறும் இத்தகைய கொள்ளைகளால் மேற்படி நிறுவனங்கள் மூடப்படுமாயின், இதைச் சார்ந்த மக்களின் கதி என்னவாகும் என்பதை பொறுப்புள்ளவர்கள் உணர்ந்து கொள்ளமாட்டார்களா என ஏங்குகிறேன். மற்றும் பல விதமான உரிமை கோராத செயல்களினல் மனித உரிமைகள் மண்ணில் புதைக்கப்படுவதையிட்டும். சமூகப் பொறுப்புள்ள எவரும் அலட்சியமாயிருந்துவிட முடியாதென்றே நம்புகிறேன். சிற்றி பெடிக்கல் சிங்கராயர், வை. இராஜசுந்தரம், போன்ற பல பிரமுகர்கள் ஏன் சாதாரண நபர்கள் கூட அண்மைக் காலங்களில் இனந்தெரியாதவர்களால் அழைத்துச் செல்லப்பட்டு, மறை பொருளாக்கப்பட்டிருப்பது இரகசியமான விடயமல்ல. இத்தகைய செயல்களின் சூத்திரதாரிகள் எவரும் மக்கள் முன், தங்கள் முகங்களை காட்டிக்கொள்ளவில்லை. இந்தச் செயல்களின் உண்மையான பின்னணி என்ன? இவர்களுக்கு என்ன நடந்தது? எங்குள்ளனர்? என்ற விபரங்கள் சாதாரண பொதுமக்களுக்கு மட்டுமன்றி உற்றார் உறவினருக்கும்கூட மறைக்கப்பட்டிருப்பதை பலத்த சந்தேகத்துடனே பொதுமக்கள் நோக்க வேண்டியவர்களாக உள்ளனர் என்பதை ஆழ்ந்த கவலையுடன் பதிவு செய்ய ஆசைப்படுகிறேன்.

இவன்
விடுதலையை நாடும் சமூகப் பொறுப்புள்ள பிரஜை

## விமானநிலைய விஸ்த்தரிப்பு காணி அபகரிப்பு:-

வவுனியாவிலும், மட்டக்களப்பிலும் விமான நிலைய விஸ்த்தரிப்பிற்காக ஈழவர்களது காணிகள் பெருமளவு சுவீகரிக்க வடவடிக்கை எடுக்கப்படுகிறது. வவுனியா விமான தளத்தைச் சுற்றியுள்ள சுமார் 600 ஏக்கர் காணியும், மட்டக்களப்பில் சுமார் 200 ஏக்கர் காணியும் சுவீகரிக்கத்தக்கதான நில அளவை வேலைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிகிறது. வவுனியாவில் சுவீகரிக்கப்படவுள்ள நிலத்தில் 100 நிரந்தர வீடுகள் உட்பட 200 வீடுகளும், சில அரிசி ஆலைகளும் ஒரு இந்துக்கோவில், ஒரு கிறிஸ்தவ தேவாலயம், விவசாயப் பண்ணைகள் என்பன அடங்குகின்றன. இப்பகுதியிலுள்ள இறம்பக்குளம் சூசையப்பர் குளம் நீர்ப்பாசணக் குளங்கள் இடித்து மூடப்பட்டு வருகிறது ஏற்கனவே சுவீகரிக்கப்பட்ட 150 ஏக்கர் நிலத்தில் இராணுவமுகாம் அமைக்கப்பட்டிருப்பதோடு, அவ்விடத்தில் வாழ்ந்த சுமார் 60 குடும்பங்கள் அகதிமுகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். மட்டக்களப்பில் காணி சுவிகரிப்பினல் சுமார் 200 குடும்பங்கள் நிரந்தரமாக பாதிக்கப்படுவர் எனத் தெரிகிறது.

## ஆலால் தர்மர் சுட்டுக் கொலை:-

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் ஆலாலசுந்தரம், தர்மலிங்கம் ஆகியோர் 02-9-85 அன்று இரவு கடத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர். மக்கள் மத்தியில் இன்னும் முற்றாக தூக்கியெறியப்படாத த. வி. கூட்டணியின் பிரதிநிதிகளான இவர்களின் கொலைக்கான காரணத்தை தெளிவு படுத்தப்பட்டிருந்தால், மக்கள் மத்தியில் பலத்த சந்தேகம் நிலவுவதை தவிர்த்திருக்க முடியும். பொருத்தமான அரசியல் சூழல் இல்லாத இத்தருணத்தில் இச்செயல் ஒரு அவசரப்பட்ட முடிவென்றே கருத வேண்டியுள்ளது.

ஈழத் தேசிய விடுதலை முன்னணி (E. N. L. F) இச்சம்பவத்தையிட்டுத் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், கவலையையும் வெளியிட்டுள்ளது. ஆனல் ஈழத்தேசிய விடுதலை முன்னணியின் ஒரு குழுவே இதற்கு பொறுப்பு என மேற்கொள்ளப்படும் பிரச்சாரம் ஐக்கியத்தை குலைக்கும் சதி என்றே எண்ணவேண்டியிருக்கும்.

# முறிவடையவும் இல்லை; முற்றுப்பெறவும் இல்லை.

## திம்புப் பேச்சுக்கள் பற்றி ஒரு கண்ணோட்டம்

ஈழவர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வுகாணும் முயற்சியில் திம்பு பேச்சுவார்த்தைகள் ஒரு முக்கிய கட்டம் என்பதனை அனைவரும் உணர்வர். இப்பேச்சுவார்த்தைகள் ஒரு தீர்வுக்கு இட்டுச்செல்லாதபோதும் முழுமையாக முறிவடைந்து விடவில்லை. திம்புவில் ஈழவர் பிரதிநிதிகளின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து முக்கிய பேச்சுவார்த்தைகள் இடம்பெறாத போதிலும், புதுடில்லியில் இலங்கை அரசுக் குழுவின் தலைவர் திரு. ஹெக்டர் ஜெயவர்த்தனா சுமார் பத்து நாட்கள்வரை தங்கியிருந்து செயல்திட்ட அறிக்கை அளவில் இந்திய அரசுடன் இணக்கம் கண்டார் என்பது யாவரும் அறிந்ததே. இதே வேளையில் ஈழவர் பிரதிநிதிகளுக்குச் சார்பாக செயற்பட்ட முக்கிய ஆலோசகர்களான திரு சந்திரஹாசன் டாக்டர் பாலசிங்கம். திரு. சத்தியேந்திரா போன்றோரின் நாடுகடத்தலும் இதையடுத்து இந்திய அரசு பிரயோகிக்கும் நிர்ப்பந்தமும் பலரையும் குழப்பமுறச் செய்துள்ளது.

இந்த நிலையில் திம்புவில் நடைபெற்றது என்ன? இந்தப் பேச்சுவார்த்தைகளின் அரசியல் விளைவு என்ன? தொடர்ந்து ஈழ விடுதலைப் போராட்டத்தில இந்திய அரசின் பாத்திரம் என்ன? என்பன போன்ற கேள்விகளுக்கு விடைகாண வேண்டியதாய் உள்ளது. முதலில திம்பு நோக்கி இலங்கை அரசையும், தமிழ்ப் போராளிகளையும் பெயரவைத்த அரசியல் காரணிகள் பற்றிப் பொதுவாக நோக்கலாம்.

### முதல் சுற்றுப் பேச்சுக்கள்

சிறீலங்கா அரசு அனுபவித்துவரும் பொருளாதார முடை, சர்வதேச நெருக்கடிகள். போராளிகளின் இடைவிடாத தாக்குதல்கள் போன்ற காரணிகளே சமாதானப் பேச்சுக்களில் ஆர்வம் காட்டத் தூண்டின. இதேபோல் சர்வதேச அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள், மக்கள் அனுபவித்த வேதனைகள் தொடர்ந்தும் போராட்டமுன்னெடுப்புககான கால அவகாசம் என்பன போன்றவைகளே போராளிகளை போர்ஓய்வுக்கு நிர்ப்பந்தித்தன. இதனுல் திம்பு நோக்கி இருசாராரும் பயணமானபோதும் அரசைப் பொறுத்தவரையில் முழுமையாக இப் பிரச்சனையைத் தீர்க்க விரும்பாத இழுத்தடிப்பு நோக்கமும், இலங்கை அரசுடனுன பேச்சுவார்த்தைகளில் நமபிக்கையிழந்த நிலையில் போராளிகளும் சென்றிருந்தனர் என்பது தெளிவு.

யூலை 8ம் திகதி ஆரம்பமான முதல்சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் பரஸ்பர அறிமுகங்களைத் தொடர்ந்து, யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்கள் பற்றியே பெரும்பாலும் இருதரப்பினரும் பேசிக்கொண்டனர். இச்சுற்றுப் பேச்சுக்களின் இறுதி நாட்களில் சிறீலங்கா அரசாங்கம் இனப்பிரச்சனைத் தீர்வுக்காக பழைய மாவட்ட சபை யோசனைகளையே மூன் மொழிந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட ஈழவர் பிரதிநிதிகள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஒரே குரலில் இதனைக் கண்டித்தனர். இதனைத் தொடர்ந்து ஈழவர் பிரதிநிதிகள் அனைவரும் நான்கு அமசங்களைக் கொண்டதான ஒரு கோரிக்கையை குறைந்தபட்ச தீர்மானமாக முன்வைத்தனர்.

இதில் குறிப்பிடப்பட்ட நான்கு அம்சங்களாவன.

1. தமிழ் பேசும் மக்களின் தனித்துவத்தை அங்கீகரித்தல்.
2. அவர்களின் வாழ்நிலைப் பிரதேசங்களை வரையறுத்தல்.
3. மொழி, கலாச்சார அம்சங்களை பேணுதல்.
4. இலங்கையை தாயகமாக கருதும் அனைவருக்கும் குடியுரிமை வழங்குதல்.

### இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள்

இத்துடன் முதற்சுற்றுப் பேச்சுக்கள் நிறைவுபெற்றன. இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் ஆகஸ்ட் 12ம் திகதி மீண்டும் ஆரம்பமாகின. இதில் ஈழவர் பிரதிநிதிகளால் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு அம்சக் கோரிக்கையை நிராகரித்த அரசுக்குழு "இலங்கை எனற ஒரே அரசினுள் அதிகாரப் பரவலாக்கம்" மூலமாக இனபபிரச்சனைக்கு தீர்வு காண முற்பட்டது. இந்த வேளையில ஈழவர் பிரதிநிதிகள் தாம் முனவைத்த கோரிக்கைகளுக்கான வரலாறு பூர்வமான நியாயங்களை எடுத்துக்காட்டி இதற்குக் குறைந்ததான அதிகாரபபரவலாக்கம அனைத்தும் வெறும் கண்துடைப்பே என வாதடடனர். இதே நேரத்தில் வவுனியாவில் அரச படையினர் புரிந்த காட்டுமிராண்டித்தனமான அத்து மீறல்களைக் கண்டித்து ஈழவர் பிரதிநிதிகள் அனைவரும் பேச்சுவார்த்தைகளைப் புறக்கணித்தனர். ஆனுல் பேச்சுவார்த்தைகள் குழப்பமுறுவதை விரும்பாத இநதிய அரசு தன் விசேட தூதுவராக திரு. ரமேஷ்பண்டாரியை திமபுவுக்கு அனுப்பிவைத்தது. திமபுவில் இரு தரப்பினரோடும் தனித்தனியாகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட ரமேஷ் பண்டாரி இணக்கம் ஏற்படுத்த பெரிதும் முயன்ருர். ஆனுல் எநத இணக்கமும் ஏற்படாத நிலையில் அனைவரும் திம்புவில இருந்து வெளியேறினர். இதனிடையே ஈழவர் போராட்ட இயக்கங்களின் தலைவர்களை புதுடில்லிக்கு அழைக்க இந்திய அரசு முயன்றபோதும் முடியவில்லை. புதுடில்லியில் சிறீலங்கா அரசுக்குழுவின் தலைவர் ஹெக்டர் ஜெயவர்த்தனு தனித்து நின்று செயற்றிட்ட அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதில் இணக்கம் கண்டார்.

### அரசியல் விளைவு என்ன?

இந்த நிலையில் திம்பு பேச்சுக்களின் தொடக்கம் முதல் இன்றுவரையான நிகழ்வுகளை முக்கியமான மூன்று கட்டங்களாக நாம் பார்க்க முடியும்.

1. இந்திய — இலங்கை அரசுகளுக்கு இடையிலான பேச்சுகள்.
2. இந்தியாவிற்கும் ஈழவர் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள்.
3. ஈழவரிடையிலுள்ள மிதவாதிகளுக்கும் போராளிகளுக்கும் இடையிலான பேச்சுகள்.

கடந்த வருட இறுதியில் பதவியேற்ற பிரதமர் ராஜீவ் காந்தி தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்தபின்னர், வாஷிங்டனுக்கு செல்வதற்கான தயாரிப்பு வேலைகளை மேற்கொண்டிருந்த சமயத்தில், சிறீலங்கா அரசின் சார்பாக லலித்அத்துலத்முதலி முதலில் டில்லிக்கு விரைந்தார். ஆனுல் அவரது விஜயம் பெருமளவு மாறுதல்களை ஏற்படுத்தாத நிலையில் நேரடியாக ஜே. ஆர்— ராஜீவ் உயர்மட்டச் சந்திப்புக்கு ஏற்பாடாகியது. சந்திப்பு திட்டமிடப்பட்டதைக் காட்டிலும் ஒரு சில நாட்கள் நீடித்து பங்களாதேஷ் புயல் அழிவுகளை இருவருமாகப் பார்ப்பதுவரை விரிவுபட்டுச் சென்றது. (இப் பேச்சுவார்த்தையின் விபரங்கள் பூரணமாகப் பகிரங்கப்படுத்தப்படவில்லை.) இச் சந்திப்பின் ஒரு பெறுபேருக சிறீலங்கா அரசும் ஈழவர் பிரதிநிதிகளும் ஒரே மேசையில் சந்தித்துப் பேசவேண்டும் என்று இந்தியா விரும்பியது. அவ்வாருன பேச்சுவார்த்தைகளினூடு பயனுக தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையைத் தீர்க்கக் கூடியதான அரசியல் தீர்வொன்றை எட்ட முடியும் என்றும், இந்தியா நம்பியது. இதனுல்தான் ஈழவர் பிரதிநிதிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு இட்டுவரச் சில நிர்ப்பந்தங்களையும் இந்தியா பிரயோகித்தது.

ஆனுல் இலங்கையரசோ இந்தியாவின் எதிர்பார்ப்புக்கும், விருப்பத்துக்கும் புறம்பாக பழைய உளுத்துப்போன மாவட்டசபை யோசனைகளையே மீண்டும் முன்வைத்தது முட்டுக்கட்டை நிலையைத் தோற்றுவித்தது. எனினும் சாதுரியமாக ஒத்திவைத்ததன் மூலம் முட்டுக்கட்டையைத் தவிர்க்க முயற்சித்த இந்தியா, தன் விசேட தூதுவராக திரு. ரொமேஷ்பண்டாரியை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைத்தது. சுமார் நான்கு நாட்கள்வரை இங்கு தங்கியிருந்த ரொமேஷ் பண்டாரி பல்வேறு நிர்ப்பந்தங்களையும் பிரயோகித்து புது ஆலோசனை ஒன்றுடன் இரண்டாவது சுற்றுப் பேச்சுத் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இங்கு தங்கியிருக்கையில் சிறீலங்கா அரசுப் பிரதிநிதிகளை மட்டுமன்றி எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளையும் சந்தித்து சாதகமானதொரு அரசியல் சூழலை தோற்றுவிக்க முயன்ருர் திரு. ரொமேஷ்பண்டாரி. ஆனுல் சிறிமா பண்டாரநாயக்காவும், அதுராவும் கூட இந்திய அரசின் விசேட தூதுவரைச் சந்திக்க மறுத்துவிட்டனர்.

ஆக ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து இந்திய—இலங்கை அரசுகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளில், இந்திய எதிர்பார்புகளுக்கு இசைவாக சிறீலங்கா நடந்து கொள்ளவில்லைஎன்றே கருதலாம். யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட உடனேயே அமைச்சர் லலித்தும், இராணுவ தளபதியும் அவசர அவசரமாக தென் கொரியா சென்று ஆயுதக் கொள்வனவுப் பேச்சுக்களில் ஈடுபட்டமை, முறையான தீர்வுகள் எதனையும் முன் வைக்காமை, அரசபடையினரின் அத்து மீறல்கள் என்பனவற்றைக் கவனத்தில் எடுக்கும்போது மேற்படி முடிவுக்கே எவரும் வரமுடியும். அதேவேளை இந்தியப் பிரதமர் சிறீலங்கா அரசையும், ஆயுதப்படையினரையும் குறைகூறியுள்ளமைகள், தொடர்ந்தும் அப்பாவித் தமிழ்பேசும் மக்கள் கொல்லப்படுவதனையிட்டு எழுப்பும் கண்டனக்குரல்கள் என்பவற்றிலிருந்தும் இதனை உணரமுடியும்.

### சிறீலங்கா இணங்குமா?

எனவேதான் திம்புப்பேச்சுக்கள் குழப்ப நிலையை எய்தியதும், அரசுக்குழுவின் தலைவர் புதுடில்லியில் தங்கச் செய்யப்பட்டார். அவர் அங்கு தங்கியிருந்த சுமார் பத்து தினங்களில் செயற்திட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டது. அவ் அறிக்கையில் கைச்சாத்திட்டபின் கொழும்பு திரும்பிய ஹெக்டர் நடத்திய பத்திரிகையாளர் மாநாடொன்றில் பதிலளிக்கையில் "என் முதலிரு எழுத்துக்களை மட்டுமே இட்டுள்ளேன்" எனக் கூறினர். அதாவது செயற்திட்ட அறிக்கையின் நகல்பிரதியில் முழுமையாக கையெழுத்திடவில்லை என்கிருர். இதன் உள்ளர்த்தம் என்னவாக இருக்க முடியும்? மேற்படி நகல் திட்டத்தை அரசு முழுமையாக ஏற்றுக் கொள்வதில் சிக்கல்கள் இருக்கின்றன. என்பதைத்தான் காட்டுகிறது. மேலும் ஏறத்தாழ இருவாரங்கள் மேலாகக் கடந்த பின்னரும் கூட மந்திசபை மேற்படி நகல் திட்டம் பற்றி காட்டும் அசாதாரணமான மௌனமும், "என்னை யாரும் நிர்ப்பந்திக்க முடியாது" என ஜே. ஆரும், "இரண்டு மாகாணங்களை தமிழர்களுக்கு தாரைவார்க்க தயாரா?" என பிரேமதாசாவும் பேசியிருப்பதனையும், புதிய யோசனைகளுடன் பீலிக்ஸ் டயஸ் அபயசிங்க தலைமையிலானேர் புதுடில்லி சென்றிருப்பதனையும், பிரதிநிதியமைச்சரின் அமெரிக்க விஜயத்தையும் சேர்த்துப் பார்க்கும் ஒவ்வொருவரும் சிறீலங்கா மேற்படி நகல் திட்டம் பற்றி என்ன கருத்தைக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

### அரசியலமைதி ஏற்படுமா?

அடுத்ததாக இந்திய அரசுக்கும் ஈழவர் பிரதிநிதிகளுக்கும் இடையான கலந்துரையாடல்களைப் பொறுத்தவரையில் பெருமளவு விபரங்கள் பகிரங்கப் படுத்தப்படவில்லை எனலாம். எனினும் மேலெழுந்தவாரியாகப் பார்க்குமிடத்து "இந்தியாவிலுள்ளது போன்றதான மொழிவாரி மாநிலம்", அல்லது "ஒரே நாடு என்ற வகையில் அரசியற் தீர்வு" என்ற அடிப்படையில் நின்று "பூரண சுதந்திரம் கொண்ட ஈழ அரசின் உருவாக்கம்" பற்றி மாறுபடான நிலைப்பாட்டையும் கொண்டுள்ளது என எண்ணலாம்' அப்பட்டமான சந்தர்ப்ப வாத போக்கையும், இலட்சியத்திற் பூரண விசுவாசமும், தன்னம்பிக்கையும் அற்ற சில சக்திகள்இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி "இடைக்காலத் தீர்வாக ஏதோ வொன்றை ஏற்கலாம்", என்றும் "போராட்டத்தைத் தொடர்ச்சியாக நடத்தலாம்" என்றும் குழப்பமான கருத்துக்களை மக்கள் மத்தியில் விதைத்து வருகின்றனர். ஆனுல் இடைக்காலத் தீர்வென்பதோ, தற்காலிக அரசியலமைதி என்பதோ சாத்தியமான தொன்ருக எண்ண இடமிருப்பதாகத் தெரியவில்லை. முதலிற் கூறியபடி சிறீலங்கா அரசு இணக்கத் தீர்வொன்றைக் காண்பதில் காட்டிவரும் தயக்கம், தென்னிலங்கையிற் செயற்படும் எதிர்க்கட்சிச் சக்திகளின் செயற்பாடு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் எவரும் இத்தகைய இடைக்காலத் தீர்வுகளின் சாத்தியப்பாட்டை எடைபோட முடியும்.

அடுத்ததாக போராளிகளுக்கும், மிதவாதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல்களைப் பரிசீலித்தால் நான்கு பிரதான அமைப்புகளின் கூட்டணியான ஈழத் தேசிய விடுதலை முன்னணி தனது ஸ்திரமான நிலைப்பட்டைத் தொடர்ந்தும் பேணி வருகின்றது. ஈழ தேசிய விடுதலை முன்னணியின் நிலைப்பாடுகளுக்கு நேரெதிரான முரண்பாடு எதையும் வேறெவரும் பிரதிபலிக்கவில்லை. இந்த நிலையில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னுள் பாராளுமன்ற உறுப்பினர்களின் கொலைக்கும் ஈழதேசிய விடுதலை முன்னணிக்கும் சம்பந்தமிருப்பதாகக் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் (PLOT) அதன் தலைவர் உமா மகேஸ்வரனும். கூறியிருப்பது உண்மையில் ஐக்கியத்தைக் குலைக்கும் ஒரு செயலெனவே கருத வேண்டியுள்ளது. இச்சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்களை ஆதாரங்களுடன் அடையாளம் காட்டாமல் வெறுமனே குற்றம் சுமத்துவது போராட்ட சக்திகளிடையே ஐக்கியம் வளர்வதைக் குலைக்கும் ஒரு செயல் என்றே கருத வேண்டியிருக்கும்.

எனினும் பேச்சுவார்த்தைகளின் ஆரம்பம் முதல் இதுகாறும் பல சந்தர்ப்பங்களில் ஏகமனதான தீர்மானங்களை வெளியிட்டு வந்துள்ளமை ஈழப் போராட்டத்தை செழுமைப் படுத்தும் ஒன்றெனக் கருத முடியும. போராட்ட சக்திகள் தமக்கிடையே உண்மையான ஐக்கியத்தையும், புரிந்துணர்வையும் வளர்த்துக் கொள்ளுமாயின் ஈழப் போராட்டத்தின் திசைவழியைத் தீர்மானிக்கும் மாபெரும் பொறுப்பைச் சுமக்கும் பக்குவம் பெற்றவர்களாகலாம்.

# பொதுமை

எமது பாரம்பரிய மண்ணை- நாம் வாழும் நாட்டை மீட்டெடுக்கும் போராட்டம் வளர்ச்சியடைந்துவரும் அதேவேளையில் எமது பிரதேசத்தை அபகரிக்கும் முயற்சிகளும் இடம்பெற்று வருவதை கவனத்திற் கொள்ள வேண்டியவர்களாயுள்ளோம். சட்டரீதியாகவும், சட்டத்திற்கு புறம்பான இராணுவத் தர்பார்களினாலும் இத்தகைய அபகரிப்பு முயற்சிகள் நடைபெற்று வருவதை உற்றுக் கவனிக்க வேண்டும்.

பல்லாண்டுகளாக திட்டமிட்ட வகையில் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களினால் முதலில் எமது மண் அபகரிக்கப்பட்டு வந்தது இவ்வாறான சிங்களக் குடியேற்றங்கள் தமிழ் பேசும் மக்களின்பிரதேச ஒருமைப்பாட்டைக் குலைக்கும் வகையிலே மேற்கொள்ளப்பட்டது. முல்லைத்தீவு – திருமலை மாவட்டங்களுக்கு இடையில் கொக்கிளாய், நாயாறு குடியேற்றத்திட்டத்தையும், திருமலை மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு இடையில் சேருவாவிலையையும், இந்த விதமான திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இதேபோல் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் 'மதுருஓயா'த் திட்டமும் மற்றுமொரு பாரியதிட்டமிட்ட குடியேற்றும் முயற்சியேயாகும்.

இதனைவிட எல்லைப்புற மாவட்டங்களான வவுனியா, அம்பாறை போன்ற மாவட்டங்களில் இன்னுமொரு விதமான ஆக்கிரமிப்பு நிகழ்த்தப்பட்டு வருகின்றது சிங்களமக்கள் பெரும்பான்மையாக வாழும் அயல் மாவட்டங்களில் இருந்து சில உதவி அரசாங்க 'பிரிவுகளை, சில கிராம சேவகர் பிரிவுகளை இந்த தமிழ்பேசும் மக்களைக் கொண்ட மாவட்டங்களுடன் சேர்ந்து விடுவதன் மூலம் தமது பாரம்பரிய மண்ணிலேயே தமிழ் பேசும் மக்கள் சிறுபான்மையினர் ஆக்கப்படுகின்றனர். 1978ல வவுனியா மாவட்டத்துடன், இரு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் இவ்வாறு மேலதிகமாகச் சேர்க்கப்பட்டது. இதன் மூலம் வவுனியாவில் நிலவிய தமிழ்பேசும் மக்களின் பெரும்பான்மை முறியடிக்கப்பட முயற்சிக்கப்பட்டது. இப்போது இதேபோல் அம்பாறை மாவட்டத்துடன் மேலும் ஏழு சிங்கள கிராம சேவகர்களைச் சேர்க்க முயற்சி எடுக்கப்படுகின்றதாகத் தெரிகின்றது. இவ்வாறு ஏழு கிராம சேவகர் பிரிவுகள் அம்பாறையுடன் சேருமாயின் மேலும் சுமார் 93,000 சிங்களவர்கள் அம்பாறைப் பிரதேசத்தைச் சேருவர். இதனால் அம்பாறையில் தமிழ்பேசும் மக்கள் பலத்த பாதிப்புக்கு உள்ளாகுவர் என்பது நிச்சயம்.

இவற்றை விட துப்பாக்கிமுனையில் எம்மவர்கள் விரட்டப்பட்டுவருவதும் தெரிந்ததே. குமுளமுனை, அளம்பில், செம்மலை போன்ற கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்ட இத்தகைய வெளியேற்றும் படலம் தற்போது வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம், நேரியகுளம், சின்னப் புளியங்குளம் போன்ற கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு உள்ளமையினால், உயிரைமட்டும் காப்பாற்றும நோக்குடன் எல்லைப்புறங்களை அண்டிய கிராமங்களை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். திருமலை மாவட்டத்திலும் ஏறத்தாழ சகல தமிழ்க் கிராமங்களில் இருந்தும் அப்பாவிப் பொதுமக்கள் துப்பாக்கிமுனையில் விரட்டியடிக்கப்படுகின்ற துர்ப்பாக்கியச் சூழல் தொடர்கின்றதைக் கவலையுடன் சுட்டிக்காட்ட கடமைப்பட்டவர்களாவோம்.

இதேவேளை இன்னொரு விதமான ஆக்கிரமிப்பையும் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகும். கென்ற், டொலர் பண்ணைகளில் குடியமரவிருக்கும் சிங்களவர்களில் இருபதாயிரம் பேர்களின் பெயர் விபரங்களை தேர்தல் இடாப்புகளில் இடம்பெறச் செய்வதற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு குறிப்பிட்ட பகுதிகளுக்குச் செல்ல அதிகாரிகள் தயக்கம் காட்டும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தென்னிலங்கையிலேயே வதியும் இருபதினாயிரம் பேர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பிக்க சதி நடைபெறுகின்றது. இப் பகுதியில் நானூறுக்கும் குறைவான எண்ணிக்கையினரே ஆயுதங்கள்சகிதம் அமர்த்தப்பட்டுள்ளனர் என்பதை நோக்கும்போது திட்டமிட்டு எமது மண்ணை அபகரிக்க எடுக்கப்படும் முயற்சி தெளிவாகும். தற்சமயம் ஒரு லட்சத்து ஐயாயிரம் பேரைக் கொண்டுள்ள வவுனியா மாவட்டத்தில் ஏறத்தாழ முப்பத்துமூன்று சதவீதமானோர் சிங்களவராவர் என்பதையும் பார்க்கவேண்டும். ஆதலினால் மேற்படி இருபதினாயிரம் வாக்காளர்கள் புதிதாக பதிவு செய்யப்படுவதால ஏற்படும் விளைவுகள் தமிழ்பேசும் மக்களின் நலனுக்கு குந்தகம் ஏற்படும் என்பதில் சந்தேகமிருக்கமுடியாது,

எனவேதான் மண்ணை மீட்கப் புறப்பட்ட எமது போராட்டத்தின் ஆழ – நீளங்களை உணர்ந்துகொண்டு, இப்போராட்டத்தின் பல்வேறு பரிமாணங்களையும் தெளிவாகப் புரிந்துகொண்டு மிகக பொறுப்புணர்ச்சியுடன் கடமையாற்ற வேண்டிய மாபெரும் பொறுப்பு இன்றைய சந்ததியின் தோள்களில் சுமத்தப்பட்டுள்ளது. ஆதலினால் நாளைய சந்ததியினர் பார்த்துக்கொள்ளட்டும் என்று போராட்டத்தின் எந்த அம்சத்தையும் ஒத்திவைக்காமல் போராடுவதும், அதன் மூலம் பூரண விடுதலை ஒன்றை எட்டுவதும் இன்று விடுதலைக்காகப் போராடும் இயக்கங்களுக்கே உரிய கடமையாகும்.

# ஈழம்

## உலக ஆயுத விற்பனையாளர் கொழும்பில் முற்றுகை

உலகின் பல பகுதிகளைச் சேர்ந்த முன்னணி ஆயுத விற்பனையாளர்கள் தற்போது கொழும்பு வந்து முற்றுகையிட்டுள்ளனர் இந்த ஆயுத விற்பனையாளர்கள் பல்வேறு சலுகைகளைக் கொண்ட கடன் திட்டத்தின் கீழ் இலகுவான கொடுப்பனவு அடிப்படையில் ஆயுதங்களை விற்பனை செய்ய முன்வந்துள்ளனர் என்று சென்னையிலிருந்து வெளிவரும் ''இந்து'' ஆங்கில தினசரி செய்தி வெளியிட்டுள்ளது. ஆயுத விற்பனையில் உள்ளூர் நிறுவனம் ஒன்றும் ஈடுபட்டுள்ளது. குறைந்த ரக தரமான ஆயுதங்களும் இறக்குமதியாகியுள்ளன.

இலங்கை அரசாங்கம் ஒரு விமானம் நிறைந்த வெடி மருந்துகளையும், மற்றும் சிறு ஆயுதங்களையும் இறக்குமதி செய்தது. இவற்றின் ஒரு தொகுதி ஆயுதங்களை தரம் குறைந்தவை என்று இலங்கை அரசாங்கம் நிராகரித்து விட்டது இவ்விதமான மூலம் ஆயுதங்களை கொள்வனவு செய்ய முகவராக இருந்த உள்ளூர் வர்த்தகர் அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்ட ஆயுதத் தொகுதியை தமிழ்ப் போராளிகளுக்கு விற்பனை செய்ய முயற்ச்சித்தார் என்ற சந்தேகத்தின் மீது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று ''இந்து'' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

## ஸ்ரீ லங்காவிற்கு உதவி வழங்க உலக நாடுகள் தயக்கம்

தமிழர் பிரச்சனை, இங்கு அழைக்கப்பட்ட இஸ்ரேல் உளவுப் படை என்பவற்றின் காரணமாக சவூதி அரேபியாவின் பல கோடி ரூபா பண உதவியுடனும், கனடாவின் தொழில் நுட்ப உதவியுடனும் ஆரம்பமாகவிருந்த மாதுறு ஓயாத் திட்டம் கைவிடப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்துள்ளது நிதியமைச்சர் திரு. றொனி டி மெல் தற்போது கனடா சென்றிருக்கிறாரென்றும், மாதுறு ஓயாத் திட்டத்தில் கனடாவின் உதவி கிடைக்காத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத் திட்டத்திற்கு சவூதி அரேபியா உலகவங்கி மூலம் பலகோடி ரூபா வழங்க முன்வந்ததாகவும் இலங்கைக்கு இஸ்ரேலிய உளவுப்படை அழைக்கப்பட்டதைத் தொடர்ந்து சவூதி அரேபியா இந்த உதவித் தொகையை வழங்க மறுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது சவூதி அரேபியாவின் பணம்கிடைக்காததினால் கனடா தொழில் நுட்ப உதவியை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இத்திட்டத்திற்கான நிதியை வேறு வழிகள் மூலம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கனடா அறிவித்திருப்பதுடன் மாதுறு ஓயாத் திட்டத்தில் விகிதாசாரப்படி சிறுபான்மையினருக்கு இடமளிக்க வேண்டுமென்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டிருப்பதாகவும், பி. பி. ஸி. விமாசனத்தில் தெரிவிக்கப்பட்டது.

உலக நாடுகளில் பல்வேறு இயக்கங்கள் ஈழத்தமிழருக்காகச் செய்து வரும் பிரச்சாரம் காரணமாக இலங்கைக்கு உதவியளிக்க உலக நாடுகள் பின்வாங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## அமெரிக்காவின் அறிவிப்பு

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கு இந்தியாவின் நல்லெண்ண உதவிகளே பெரிதும் தேவைப்படுகின்றன இப்பிரச்சனை குறித்த சமரச முயற்சிகளில் அமெரிக்கா தலையிட மாட்டாது. முட்டுக்கட்டையாகவும் இருக்காது என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சு இந்திய அரசாங்கத்திடம் உறுதியாகத் தெரிவித்துள்ளது இலங்கை இனப்பிரச்சினை சமரச முயற்சிகள் குறித்து கருத்து வெளியிடுகையிலே அமெரிக்க ராஜாங்க அமைச்சு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக அமெரிக்க ராஜாங்க அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்திருப்பதாவது; ''இலங்கையின் அரசியல் அமைப்பு விஷயங்களில் அமெரிக்கா விசேஷ – ஆலோசனைகள் எதனையும் வழங்க மாட்டாது இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியாவின் ஒத்துழைப்பே தேவைப்படுகிறது இந்தியாவின் நல்லெண்ண உதவிகளை இலங்கை புறக்கணித்தால் சமரச முயற்சிகளில் அமெரிக்கா குறுக்கிடாது இலங்கையின் இனபபிரச்சனையை இந்தியாவினாற் தான் தீர்க்கமுடியுமென்பதை அமெரிக்கா நன்குணர்ந்துள்ளது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் இச்செய்தியை இந்தியா பாராட்டியுள்ளதுடன் நன்றியும் தெரிவித்துள்ளது.

## தமிழக மக்களின் எழுச்சி

ஈழத் தமிழ்த் தீவிரவாதத் தலைவர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்றியதைக் கண்டித்து தி. மு. க. திராவிடர் கழகம், காந்தி காமராஜ் காங்கிரஸ் கட்சி ஆகியன இணைந்த ''தமிழ் ஈழ ஆதரவாளர் கழகம்'' 30-8-85 வெள்ளிக்கிழமையன்று தமிழ் நாடு முழுவதும் ரயில் நிறுத்தப் போராட்டம் நடத்தியது. கலாநிதி எஸ். ஏ. பாலசிங்கம், சிரேஸ்ட சட்டத்தரணி என். சத்தியேந்திரா, திரு. எஸ். வி சந்திரஹாசன் ஆகியோர் இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டதைக் கண்டிக்கும் முகமாக இந்த ரயில் மறியல் போராட்டம் நடந்தது. தமிழ்நாடு பாண்டிச்சேரி அரசாங்கங்கள் முன்கூட்டியே ரயில் சேவைகளை நடத்தாது நிறுத்திவிட்ட போதிலும் புகையிரத நிலையங்களில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு நின்று ஆர்ப்பாட்ட கோஷங்களை எழுப்பினர். மறியல் போராட்டத்தில் ஈடுபட முனைந்த குற்றத்திற்காக தி. மு. க. பொதுச் செயலாளர் உட்பட மூவாயிரத்து ஐநூறு பேர் கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர்.

தமிழ் நாடு முழுவதும் நடந்த இந்த ரயில் மறியல் போராட்டத்தினால் சரக்கு ரயில்கள் உட்பட 500 ரயில்கள் ஓடவில்லை. சில இடங்களில் ரயில்வே கடவைகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதோடு தண்டவாளத்தில் பாறாங்கற்கள் போட்டு வழிமறிக்கப்பட்டிருந்தன. ரயில்கள் முற்றாக ஓடாததனால் 20,000 பிரயாணிகள் பாதிக்கப்பட்டனர், தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் இம் மறியல் போராட்டத்தினால் போக்குவரத்து பலத்த பாதிப்புக்குள்ளாகியது

## அரசு ஆயுதமயப்படுத்துகிறது

ஸ்ரீ லங்கா நவபாசிச அரசாங்கமானது தன்னை ஆயுதமயப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக இத்தாலியிலிருந்து ''புலு தண்டர்'' என்னும் ஹெலிகொப்டரையும், ஆறு போர் விமானங்களையும் கொள்வனவு செய்துள்ளதாக சென்னையிலிருந்து வெளியான அறிக்கை ஒன்று கூறுகிறது. மேலும் எட்டு போர் விமானங்களையும் அது கொள்வனவு செய்ய இருப்பதாக சென்னையிலுள்ள ஈழத்தகவல் நிலையம் கூறுகிறது.

விமானப் பயிற்சிக்கென கொள்முதல் செய்யப்பட்ட இவ் விமானங்கள் இப்போது வானிலிருந்து தாக்குதல் நடத்தும்வகையில் மாற்றப்பட்டுள்ளனவாம். இயந்திரத்துப்பாக்கிகள், ஏவுகணைகள் முதலியவை பொருத்தப்பட்டிருப்பதுடன் நேப்பாம் குண்டுகளும் இந்த விமானங்களில் உண்டு என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளியீடு:- ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) தொடர்பு:- பொதுமை த. பெ. 2856 சென்னை 600024.